உ

வேலுமயிலுந்துணை.

குருபாததாசர் அருளிச்செய்த
திருப்புல்வயல்

# குமரேசசதகம்.

இஃது
சிதம்பரம்
குருநாத சுவாமிகளால்
பார்வையிடப்பட்டு

நுங்கம்பாக்கம்
அருணகிரி முதலியார்
அவர்களது
அம்பாளச்சேந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1896

உ

சிவமயம்.

# குமரேசசதகம்.

காப்பு.

பூமேவுபுல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமேவியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்குநிகரென்று பனிசொரிதல்போலவு மனைக்குநிகரென்று சிறுபெண், மணல்வீடுகட்டுவது போலவுஞ்சூரியன்முன் மருவுமின் மினிபோலவும், பாருக்குணல்லோர்மு னேபித்தர்பலமொழி பகர்ந் திடுஞ்செயல்போலவும், பச்சைமயிலாடுதற் கிணையென்றுவான்கோ ழி பாரிலாடுதல் போலவும், பூரிக்குமினியகா வேரிக்கு நிகரென்று போதுவாய்க்கால்போலவும், புகல்சிப்பிமுத்துக்கு நிகராப்பளிங்கை ப் பொருந்தவைத்ததுபோலவும், வாரிக்குமுன்வாவி பெருகல்போ லவுமின்சொல் வாணர்முனுகந்துபுல்லை, வாலகுமரேசர்மேற் சதகம் புகன்றனன் மனம்பொருத்தருள்புரிகவே.

குமரேசர் மகிமை.

பூமிக்கோராறுதலை யாய்வந்துசரவணப் பொய்கைதனில்விளை யாடியும், புனிதர்க்குமந்த்ரவுப தேசமொழிசொல்லியும் போதனைச் சிறையில்வைத்தும், தேமிக்கவரிகரப் பிரமாதிகட்குஞ் செயிக்கமு டியாவசுரனைத், தேகங்கிழித்துவடி வேலினாலிருகூறு செய்தமரர்சி றைதவிர்த்தும், நேமிக்குளன்பரிட ருற்றசமயந்தனி னினைக்குமுன் வந்துதவியும், நிதமுமெய்த்துணையாய விளங்கலா லுலகிலுனைநிகரா ன தெய்வமுண்டோ, மாமிக்கதேன்பருகு பூங்கடப்பமணிமார்பனே வள்ளிகணவா, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (க)

அந்தணரியல்பு.

குறையாதகாயத்ரி யாதிஜெபமகிமையுங் கூறுசுருதிப்பெரு மையுங், கோதிலாவாகம புராணத்தின்வளமையுங் குலவுயாகாதிபல வும், முறையாநடத்தலாற் சகலதீவினைகளையு முளரிபோலேதகிப் பார், முதன்மைபெறுசிலைசெம்பு பிருதுவிகளிற்றெய்வமூர்த்தமுண் டாக்குவிப்பார், நிறையாகநீதிநெறி வழுவார்களாகையா னீண்மறை

பொழிந்திடுவதும், நிலமதுசெழிப்பது மரசர்செங்கோல்புரியு நிலையு மாதவர்செய்தவமும், மறையோர்களாலே விளங்குமிவ்வுலகத்தின் மானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨)

அரசரியல்பு.

குடிபடையிலபிமான மந்திராலோசனை குறிப்பறிதல் சத்யவசனங், கொண்டநீத்தமவரவர்க் கேற்றமரியாதைபொறை கோடாதசதுருபாயம், படிவிசாரணையொடு ப்ரதானிதளகர்த்தரைப் பண்பறிந்தேயமைத்தல், பல்லுயிரெலாந்தன்னுயிர்க்கு நிகரென்றேபறித்தல் குற்றங்கள்களைதல், குடிபெறுதனக்குறுதி யானநட்பகமின்மை சுகுணமொடுகல்வியறிவு, தோலாதகாலமிட மறிதல்வினைவலிகண்டுதுஷ்டநிக்ரகசௌரியம், வடிவுபெருசெங்கோ னடத்திவருமரசர்க்கு விழுவாதமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩)

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலை பேசிலாபஞ்சிறிது கூடிவரநயமுரைப்பார், கொள்ளுமொருமுதலுக்கு மோசம்வராதபடி குறுகவேசெலவுசெய்வார், வண்டபுரட்டர்தா முறிதந்துபொன்னடகுவைக்கினுங் கடனீந்திடார், மருவுநாணயமுளோர் கேட்டனுப்பினுமவர் வார்த்தையிலெலாங்கொடுப்பார், கண்டெழுதுபற்றுவரவினின் மயிர்பிளந்தே கணக்கிலணுவாகிலும்விடார், காசுவீணிற்செலவிடாருசிதமானதிற் கனதிரவியங்கள்விடுவார், மண்டலத்தூடுகன வர்த்தகஞ்செய்கின்ற வணிகர்க்குமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

வேளாளரியல்பு.

நல்லதேவாலயம் பூசனைநடப்பது நாடோறுமழைபொழிவதும், நாடியதபோதனர்கண் மாதவம்புரிவது நவில்வேதவேதியரெலாம், சொல்லரியயாகாதி கருமங்கள்செய்வதுந் தொல்புவிசெழிக்குநலமுஞ், சுபசோபனங்களுங் கொற்றவர்கள் செங்கோல் துலங்குமனுநெறிமுறைமையும், வெல்லரியசுகிர்தபொது வர்த்தகன்கொள்விலையும் விற்பனையுமதிகபுகழும், மிக்கவதிகாரமுந் தொழிலாளர்சீவனமும் வீரரணசூரவலியும், வல்லமைகள்சகலமும் வேளாளர்மேழியின் வாழ்வினால்விளைவனன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫)

பிதாக்கள்.

தவமதுசெய்தேபெற் றெடுத்தவன்மூதர்பிதா தனைவளர்த்தவனொருபிதா, தஎய[illegible]கவிந்தையைச் சாற்றினவனொருபிதா சார்ந்த

சற்குருவொருபிதா, அவமறுத்தாள்கின்ற வரசரொருபிதாவல்ல வா
பத்துவேளை தன்னில், அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோனொருபி
தா வன்புளமுளோனொருபிதா, கவளமிடுமனைவியைப் பெற்றுளோ,
னொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா, காசினியிலிவரை நித்தம்பிதா
வென்றுளங் கருதுவது நீதியாகும், மவுலிதனின்மதியரவு மனைவிமலை
ருதவுசிறு மதலையெனவருகுருபரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்
வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬)

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந்தவறா திருப்பவரிடத்தினிற் சார்ந்துதிருமாதிருக்கு
ஞ், சந்ததந்திருமா திருக்கும்விடமதனிற் றனதுபாக்கியமிருக்கும்,
மெய்துவருபாக்கிய மிருக்கும்விடந்தனில்விண்டுவின்களையிருக்கும்,
விண்டுவின்களைபூண் டிருக்கும்விடந்தனின்மிக்கானதயையிருக்கும்,
பத்தியுடனினியதயை யுள்ளவரிடந்தனிற் பகர்தருமமிகவிருக்கும்,
பகர்தருமமுள்ளவ ரிடந்தனிற்சத்துருபலாயனத்திறலிருக்கும், வை
த்திசை மிகுந்ததிற லுள்ளவரிடத்திற்வெகு மன்னுயிர்சிறக்குமன்
றே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இவர்க்கிவர்தெய்வமெனல்.

ஆதுலர்க்கன்னங் கொடுத்தவர்களேதெய்வ மன்பானமாணுக்க
ருக், கறியகுருவேதெய்வ மஞ்சினோர்க்காபத் தகற்றினோனேதெய்
வமாம், காதலுறுகற்புடைய மங்கையர்தமக்கெலாங் கணவனேமிக்க
தெய்வங், காசினியிலுமன்னுயிர் தமக்கெலாங்குருமரபு காக்குமன்
னவர்தெய்வமாம், ஓதரியபிள்ளைகட் கன்னைதந்தையர்தெய்வமுய
ர்சாதிமாந்தர்யார்க்கும், உறவின்முறையார்தெய்வம் விசுவாசமுள்ள
பேர்க் குற்றசிவபத்தர்தெய்வம், மாதையையிறுற்ரூத்திரர்க்குமறை
யோர்தெய்வம் வானவர்க்குத்தெய்வம்நீ, மயிலேறிவிளையாடுகுகனே
புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௮)

இவர்க்கிதுநினைவெனல்.

ஞானநெறியாளர்க்கு மோக்ஷத்திலேநினைவு நல்லறிவுளோர்த
மக்கு, நாடோறுந் தருமத்திலேநினைவுமன்னர்க்கு ராச்சியந்தன்னி
னினைவு, ஆனகாமுகருக்கு மாதர்மேலேநினைவு ளஞ்சாததிருடருக்
கிங், கனுதினங்களவிலே நினைவுகனவணிகருக் காதாயமீதுநினைவு,
தானமிகுகுடியாளருக் கெலாம்வேளாண்மை தனினினைவு கற்பவர்க்
குத், தருகல்விமேனினைவு வேசியர்க்கினியபொரு டருவோர்கண்மீ
துனினைவு, மானபரனுக்குமரி யாதைமேனினைவெற்கு மாறாதுன்மீ
துனினைவு, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே
சனே. (௯)

### இவர்க்கிதுவில்லையெனல்.

வேசைக்குநிசமில்லை திருடனுக்குறவில்லை வேந்தற்குநன்றியில்லை, மிடியற்குவிலைமாதர் மீதுவங்கணமிலை மிலேச்சற்குநிறையதில்லை, ஆசைக்குவெட்கமிலை ஞானியானவனுக்குளகமில்லை மூர்க்கன்றனக், கன்பிலைகாமிக்குமுறையிலை குணமிலோர்க்கழகில்லைசித்தசுத்தன், பூசைக்குநவிலங்க சுத்தியிலையாவுமுணர்புலவனுக்கயலோரிலை, புல்லனுக்கென்றுமுசிதானுசிதமில்லைவருபுலைபர்க்கிரக்கமில்லை, மாசைத்தவிர்ந்தமதிமுகயகனையொடு வள்ளிக்கிசைந்தவழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௰)

### இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவராமலுலகபரிபாலன நடத்துமவனேயரசனும், ராசயோசனைதெரிந்துறுதிபாகியசெய்தி நவிலுமவனேமந்திரி, நேயமுடனேதன் சரீரத்தையெண்ணாத நிர்வாகியேசூரனும், நிலைபெறுமிலக்கணமிலக்கியமறிந்துசொலு நிபுணகவியேகவிஞனும், ஆயதொருவாகடந்தாதுவினிதானமு மறியுமூகியோன்வைத்தியன், அகமின்றிமெய்யுணர்ந்தைம்புல னொழித்துவிட் டவனேமெஞ் ஞானியெனலாம், மாயவர்சகோதரி மனோன்மணிக்கன்பான வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

### விரைந்தடக்கத்தகுவனவிவையெனல்.

அக்கினியைவாய்மூர்க்கத் துர்ச்சனரை வஞ்சமனையாளைவளர்பயிர்கொள்களையை, அஞ்சாவிரோதிகளை யநியாயமுடையோரையகீர்த்திப் பெண்களார்ப்பைக், கைக்கினியதொழிலாளியைக்கொண்ட வடிமையைக் களவுசெய்யுந்திருடரைக், கருதியவிசாரத்தையடக்கமில்பலிசையைக் கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாப்பிணியையவைபுதாசீனத்தை வினைமூண்டிடுஞ்சண்டையை, விஷமேறுகோரத்தை யன்றடக்குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கிளையகண்ணிகுறவள்ளிதெய்வானையை மணஞ்செய்தபேரழகனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௧௨)

### இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக்கொடுக்குந் தியாகிகடமக்குநற் பொருள்துரும்பு, தன்னுயிரையெண்ணாத சூரனுக்கெதிராளிதளமெலாமொருதுரும்பும், போனபெரியருக் கற்பரதுகையினிற் பிரயோசனந்துரும்பு, பெரிதானமோக்ஷசிந் தனையுள்ளவர்க்கெலாம் பெண்போகமொருதுரும்பு, தீராதசகலமும் வெறுத்ததுறவிக்குவிறல் சேர்வேந்தனொருதுரும்பு, செய்யகலைநாமகள் கடாட்சமுள்ளோர்க்கெலாஞ் செந்தமிழ்க்கவிதுரும்பாம், வாராருமணிகொள்முலை வள்ளிதெய்வானையைமணம்புணரும்வடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௩)

### ...துணைவிளக்குவ திதுவெனல்.

பகல்விளக்குவதிரவி நிசிவிளக்குவதுமதி பார்விளக்குவது மேகம், பதிவிளக்குவதுபெண் குடிவிளக்குவதரசு பரிவிளக்குவது வேகம், இகல்விளக்குவது வலிநிறைவிளக்குவது நலமிசைவிளக்குவதுசுதியூ, ரிடம்விளக்குவகுடித் யுடல்விளக்குவதுண்டியினியசொல்விளக்குவதருள், புகல்விளக்குவதுகொடை தவம்விளக்குவதறிவுபூவிளக்குவதுவாசம், பொருள்விளக்குவதுதிரு முகம்விளக்குவதுநகை புத்திவிளக்குவதுநூல், மகமவிளக்குவதுமறைசொலவிளக்குவதுநிசம் வாவியைவிளக்குவதுநீர், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கச)

### பிறப்பிடநலமையால் நன்மைபெறுமை.

சிங்காரவனமதி லுதித்தினுங்காகமது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ, திரையெறியும்வாவியிற் பூத்தாலுமோகொட்டி செங்கஞ்சமலராகுமோ; அங்கானகத்திற் பிறந்தாலுமுயலான தானையின்கன்றுகுமோ, ஆண்மையாகியநல்ல குடியிற்பிறந்தாலுமசடர்பெரியோராவரோ, சங்காபிபாற்கடல் பிறந்தாலுநத்தைதான் சாலக்கிராமமாமோ, தடமேவுகடநீரி லேயுப்புவிளையினுஞ் சாரசர்க்கரையாகுமோ, மங்காதசெந்தமிழ்க் குறுமுனிக்குபதேசம்வைத்தமெய்ஞ்ஞானகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கரு)

### பலர்க்கும்பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியுமுதாரசற்குணமுடையசோவுமுருணியினீரும், கூட்டமிடுமம்பலத் துறுதருவினீழலுங் குடியாளர்விவசாயமும், கண்டவர்களெல்லாம் வரும்பெருஞ்சந்தியிற் கனிபலபழுத்தமாமும்,கருணையுடனேவைத்திடுந் தண்ணீர்ப்பந்தலுங்காவேரிபோலூற்றமும், விண்டலத்துறைசந்தி ராதித்தகிரணமும் வீசுமாருதசீதமும், விவேகியெனுநல்லோ ரிடத்திலுறுசெல்வமும் வெகுசனர்க்குபகாரமாம், வண்டமிர்கடப்பமலர் மாலையணிசெங்களப மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கசு)

### தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமானதுகழலி னின்றுருகிமறுகினுந் தன்னொளிமழுங்கிடாது, சந்தனக்குறடுதான் மெலிந்துதேய்ந்தாலுமோபொலிவெண்மைகுறைவுறுது, போதவேகாய்ந்துநன் பால்குறுகினுலும்பொருந்துசுவைபோய்விடாது, துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட்டாலுந் துலங்குகுண மொளியாதுபின், தொன்மைதருபெரியோர் மடிந்தாலுமவர்களது தூயநிறைதவறுமோ, மங்களகல்யாணிகுறமங்கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கஎ)

நரகில் வீழ்வோர்.

மன்னரைச்சமரில்விட் டோடினவர்குருமொழி மறந்தவர்கொலைப்பாதகர், மாதாபிதாவை நிந்தித்தவர்கள் பரதாரமருவித்திரிந்தபேர்கள் அன்னங்கொடுத்தபே ருக்கழிவையெண்ணினோ ரரசடைக்கியவமைச்சர், ஆலயமிகழ்ந்தவர்கள் விசுவாசகாதகரருந்தவர் தமைப்பழித்தோர், முன்னுதவியாய்ச்செய்த நன்றியைமறந்தவர் முகஸ்துதிவழக்குரைப்போர், முற்றுசிவபத்தரை நடுங்கச்சினத்தவர்கண முழுதும் பொய்யுரைசொல்லுவோர், மன்னொருவர் வைத்தபொருளபகரித்தோரிவர்கண்மாநரகில் வீழ்வரன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௮)

சரீரசுகம்.

மாதத்திரண்டுவிசைமாதரைப்புல்குவது மறுவறுவிரோசனந்தான், வருஷத்திரண்டுவிசைதைலந்தலைக்கிடுதல் வாரத்திரண்டுவிசையாம், மூதறிவினொடுதனது வயதினுக்கிளையவொரு மொய்குழலுடன்சையோகம், முற்றுதயிர்காச்சுபால் நீர்மோருருக்குநெய் முதிராவழுக்கையிளநீர், சாதத்திலெவ்வளவா னாலும்புசித்தபின் னகந்தனக்குவாங்கல், தயையாகவுண்டபி னுலாவலிவைமேலவர் சரீரசுகமாமென்பர்காண், மாதவகுமாரிசாரங்கத்துதித்தகுற வள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௯)

யார்க்குமநுபோகம்விடாமை.

தேசுபெறுமேருபிர தக்ஷிணஞ்செய்துமதி தேகவடுநீங்கவில்லை திருமாலுறங்கிடுஞ் சேடனுக்குவணன் செறும்பகை யொழிந்ததில்லை, ஈசன்கழுத்திலுறு பாம்பினுக்கிறைவேறிலாமலேவாயுவாகும், இனியகண்ணாகிவரு பரிதியானவனுக் கிராகுவோகனவிரோதி, ஆசிலாப்பெரியோ ரிடத்தினிலடுக்கினு மமைத்தபடி யன்றிவருமோ, அவரவர்களநுபோக மனுபவித்திடல்வேண்டு மல்லால்வெறுப்பதெவரை, வாசவனுமும்பரனை வரும்விசயசயவென்று வந்துதொழுதேத்துசரணா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௰)

இதுவின்றியிதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூ ரறிவிலாவாணிபங் குணமிலா மனைவியாசை, குடிநலமிலாநாடு நீதியில்லாவரசு குஞ்சரமிலாதவெம்போர், திருவிலாமெய்த்திறமை பொறையிலாமாதவக் தியானமில்லாதநிஷ்டை தீபமில்லாதமனை சோதரமிலாதவுடல் சேகரமில்லாதசென்னி, உருவிலாமெய்வளமைபசியிலாவுண்டிபுக லுண்மையில்லாதவசனம்யோசனையிலாமந்திரி தைரியமிலாவீர முதவியில்லாதநட்பு, மருவிலாவண்ணமலர் பெரியோரிலாதசபை வைத்திருந்தென்பயன், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௧)

பகைக்கப்படாதவரிவரெனல்.

அரசர்பகையுந்தவம் புரிதபோதனர்பகையு மரியகருணீகர்ப
கையும், அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு மருளி
லாக்கொலைஞர்பகையும், விரகுமிகுமூரிலுள் ளோருடன்பகையுமி
கு விகடப்ரசங்கிபகையும், வெகுசனப்பகையுமந் திரவாதியின்ப
கையும் விழைமருத்துவர்கள்பகையும், உருமருவுகவிவாணர் பகை
யு மாசான்பகையு முறவின்முறையார்கள்பகையும், உற்றதிரவியமு
ளார் பகையும்யந்திரிபகையு மொருசிறிதுமாகாதுகாண், வரநதியி
ன்மதலையெனவினியசரவணமிஞ்சையில் வருகருணசிறுகுழவியே, மயி
லேறி விளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௨௨)

பேயெனப்படு வோரிவரெனல்.

கடனுதவுபேர்வந்து கேட்கும்வேளையின்முகங் கடுகடுக்கின்
றபேயும், கனமருவுபெரியதனம் வந்தவுடனிறுமாந்து கண்விழிக்
காதபேயும், அடைவுடன்சத்துருவின் பேச்சைவிசுவாசித்தகப்பட்
டுழன்றபேயும், ஆசைமனையாளுக்கு நேசமாயுண்மைமொழி யான
தையுரைத்தபேயும், இடரிலாநல்லோர்கள் பெரியோர்களைச்சற்று
மெண்ணு துரைத்தபேயும், இனியபரி ஞானத்தி லாசைகொண
டொருவர்க் கிடுக்கண்செய்திட்டபேயும், மடமனையிருக்கப் பாத்
தையைப்புணர்பேயும் வசைபெற்றபேய்களன்றோ, மயிலேறிவிளை
யாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௩)

அவ்வவ்வினத்திலுயர்ந்தவை.

தாருவிற்சந்தான நதியினிற்கங்கண விரதத்தினிற் சோமவார
ம், தகைபெறுநிலத்தினிற் காஸ்மீரகண்டந் தபத்திற்சிதம்பரதலம்,
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசுவிற்காம தேனுமூளி வரிநாரதன்,
செல்வநவமணிகளிற் றிகழ்பதுமராகமணிதேமரிலம்போருகம், பே
ருலவுகற்பினி லருந்ததிகதித்திடுபெலத்தின்மாருதம்யானையிற், பே
சிலைராவதந்தமிழினிலகத்தியன் பிரணவம்மந்திரத்தில், வாரிதியிலே
திருப் பாற்கடல்குவட்டினின் மகாமேருவாகுமன்றோ, மயிலேறிவி
ளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௪)

அவரவர்க்குப்பெலமாவன.

அந்தணர்க்குயர்வேத மேபெலங்கொற்றவர்க் கரியசௌரிய
மேபெலம்; ஆனவணிகர்க்கு நிதியேபெலஞ்சூத்திரா காயினேருழ
வேபெலம், மந்திரிக்குச்சதுருபாயமேபெலநிதி மானுக்குநடுவேபெ
லம், மாதவர்க்குத்தபசு பெலமடவியர்க்குநிறை மானமிகுகற்பே
பெலம், தந்திரமிகுத்தகன சேவகர்தமக்கெலாஞ் சாமிகாரியமேபெ
லம், சான்றவர்க்குப்பொறுமை யேபெலம்புலவோர் தமக்குநிறைக
ல்விபெலமாம், வந்தனைசெயும்பூசை செய்பவர்க்கன்புபெலம் வால
வடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவு
குமரேசனே. (௨௫)

இருந்தும்பயன்படாதவை

தருணத்திலுதவிசெய்யாதநட்பாளர் பிறந்தெனபிறவாமலென்ன, தாரதாரமறிந்துமுறை செய்யாதமன்னரைச் சார்ந்தென்ன நீங்கிலென்ன; பெருமையுடனுண்மையில் லாதவொருபிள்ளையைப்பெற்றென பெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பி லாதவர்கணேசம் பிடித்தென விடுக்கிலென்ன, தெருளாகமானமில் லாதவொருசேவகஞ்செய்தெனசெயாமலென்ன, தேகியெனவருபவர்க்கீயாதசெல்வஞ் சிறந்தெனமுறிந்துமென்ன மருவிளமைதன்னி லில்லாதகன்னிகைபின்புவந்தெனவராமலென்ன, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (உசு)

உபகாரமில்லாதவை.

கடனீர்மிகுந்தென்னவொதிதான்பெருத்தென்ன கீட்டிலவுமலரிலென்ன, கருவேல்பழுத்தென்ன நாய்பால்சுரந்தென்னகானின்மழைபெய்துமென்ன, அடர்கழுதைலத்தி நிலமெல்லாங்குவிந்தென்ன வரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்ன வாஸ்தானகோழைபலவரியநூலோதியென்ன, இடமினியபூதம் வெகுபொன்காத்திருந்தென்ன திரணமிகுங்கரடிமயிர்தான், செறிவாகிநீண்டென்ன வஸ்த்ரபூஷணமெலாஞ் சித்திரத்துற்றுமென்ன, மடமிகுந்தேவர்க்கு முபகாரமில்லாத வம்பர்வாழ்வுக்குநிகராம், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (உஎ)

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லியும் தன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொளிக்கும்பதர், தக்கபெரியோர்புத்தி கேளாதபதர்தோழர் தம்மொடுசலிக்கும்பதர், பின்புகாணுவிடந் தன்னிலேபுரணிபல பேசிக்களிக்கும்பதர், பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கும்பதர், பொன்பணமிருக்கவே போயிருக்கின்றபதர் பொய்சாட்சிசொல்லும்பதர், புவியோர்நடத்தையையிகழ்ந்தபதர் தன்மனைவிபுணர்தல்வெளியாக்கும்பதர், மண்புணருப்வேசையுடன் விபசரிக்கின்றபதர் மனிதரிற்பதரென்பர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவு குமரேசனே. (உஅ)

காணுவிடிற்றுயரப்படுமவை.

இரவிகாணுவனச மாரிகாணுதபயி ரிந்துகாணுதகுமுதம், ஏந்தல்காணுநாடுகரைகள்காணுவோட மின்சொல்காணுவிருந்து, சுரபிகாணுதகன் றன்னைகாணுமதலை சோலைகாணுதவண்டு, தோழர்காணுநேயர் கலைகள்காணுதமான் சோடுகாணுதபேடு, குறவர்காணுசைபதியாகிகாணுவறிஞர் கொழுநர்காணுதபெண்கள், கொண்டல்காணுதமயில் சிறுவர்காணுவாழ்வு கோடைகாணுதகுயில்கள், வரவுகாணுதசெலவிவையெலாம்புவிமீதில் வாழ்வுகாணுவிளமையாம், மயிலேறிவிளையாடுகுகனே புல்வயநீடுமலைமேவு குமரேசனே. (உகூ)

## வியாதிமூலங்கள்.

கல்லினான்மயிரினான் மிதூண்விரும்பலாற் கருதியவிசாரத்தினால் கடுவழிநடக்கையான் மலசலமடக்கையாற்கனிபழங்கறியுண்ணலால் நெல்லினாலுமியினாலுண்ட பின் மூழ்கலால்நித்திரைக ளில்லாமையால், நீர்ப்பகையினாற்பனிக்காற்றிலுடனேதலா னீடுசருகிலையூறலால், மெல்லிநல்லார்கல்வி யதிகமும்விரும்பலால் விழ்மலஞ்சிக்குகையினால், மிகுசுமையெடுத்தலா லிளவெயிற்காய்தலான் மெய்வாடவேலை செயலால், வல்லிரவிலேதயிர்கள் சாகாதியுண்ணலால் வன்பிணிக்கிடமென்பர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௫௰)

## செத்துஞ்சாகாதவர்.

அனைவர்க்குமுபகார மாம்வாவிகூடமுண் டாக்கினோர்நீதிமன்னர், அழியாததேவாலயங்கட்டிவைத்துளோராகரங்கள் செய்தபெரியோர், தனையொப்பிலாப்புதல் வனைப்பெற்றபேர் பொருதுசமர்வென்றசுத்தவீரர், தரணிதனினிலைநிற்க வென்னாளுமாறாத தருமங்கள்செய்தபேர்கள், கனவித்தைகொண்டவர்க ளோயாதகொடையாளர்காவியஞ்செய்தகவிஞர், கற்பினின்மிகுத்தவொரு பத்தினிமடந்தையைக் கடிமணஞ்செய்தோர்களும், மனிதர்கள்சரீரங்கள் போகினுஞ்சாகாதமனிதரிவராகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௫௧)

## சாகாதிருந்துஞ்செத்தவர்.

மாறாதவறுமையோர் தீராதபிணியாளர் வருவேட்டகத்திலுண்போர், மனைவியைவழங்கியே சீவனஞ்செய்குவோர் மன்னுமொருராசசபையில், தூறாகநிந்தைசெய் துய்குவோர்சிவிகைகள் சுமந்தேபிழைக்கின்றபேர், தொலையாவிசாரத் தழுந்துவோர்வார்த்தையிற் சோர்வுபடலுற்றபெரியோர், வீறாகமனையாடனக்கஞ்சிவந்திடு விருந்தினை யொழித்துவிடுவோர், வீம்புடன்செல்லாத விவகாரமது கொண்டு மிக்கசபையேறுமசடர் மாறாகவிவரெலா முயிருடன்செத்தசவ மாகியொளிமாய்வர்கண்டாய், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௫௨)

## சிறிதும் பயன்படாதவர்.

பதராகிலுங்கன விபூதிவிளைவிக்கும்பழமைபெறுசுவராகிலும், பலருக்குமறைவாகு மாரிடுஞ்சிடுமலம் பன்றிகட்குபயோகமாம், தகமிகுகடாவென்னி லுழுதுபுவிகாக்கும் வன்கழுதையும் பொதிசுமக்கும், கல்லெனிற்றேவர்களு மாலயமுமாம்பெருங் கான்புற்றும்வாமனையாம், இதமிலாச்சவமாகி லுஞ்சிலர்க்குதவிசெய் மிழிவுறுகுரங்காயினும், இரக்கப்பிடித்தவற் குதவிசெய்யும்வாறுகோ லேற்றமாளிகைவிளக்கும், மதமதுமிகும்பரமலோபராலுபகாரமற்றொருவருக்குமுண்டோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௫௩)

### உலுத்தரியல்பு.

இரவியங்காக்குமொரு பூதங்கள்போற்பணந் தேடிப்புதைத்துவைப்பார், சீலநலமாகவுங் கட்டார்கணல்லமுது செய்துண்ணாறமுஞ்செய்யார், புகவலர்செய்தண்டந் தனக்கும்வலுவாகப் பகுந்திருடருக்கும்வார், புலவரைக்கண்டவுட னோடிப்பதுங்குவார் புராணிகர்க் கொன்றுமுதவார், விரகறிந்தேபிள்ளை சோறுகறிதினுமளவில் வெகுபணஞ்செலவாகலால், விளையாடுமிழவனும் பிள்ளையேபிள்ளையென மிகுச்செட்டிசொன்னகதைபோல், வரவுபார்க்கின்றதேயல்லாதுலோபியர்கண் மற்றொருவருக்கீவரோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௧௪

### திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங் கங்காசலத்திலுங் கமலாசனந்தன்னிலும், காகுத்தன்மார்பிலுங் கொற்றவரிடத்திலுங் காளியின்கூட்டத்திலும், நடமாடுபயிரிலும் பொய்வார்த்தைசொல்லாத நல்லோரிடந்தன்னிலும், நல்லசுபலட்சண மிருந்தமனைதன்னிலும் ரணசுத்தவீரர்பாலும், அடர்கேதனத்திலுஞ் சுயம்வரந்தன்னிலு மருந்துளசிவில்வத்திலும், அலர்தருகடப்பமலர் தனிலுமிரதத்திலு மதிகுணமானரூப, மடவாரிடத்திலுங் குடிகொண்டு திருமாதுமாறுதிருப்பளன்றே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடுமலைமேவுகுமரேசனே

### மூதேவிவாழிடங்கள்.

சோரமங்கையர்கணிச முறையார்கள் வாயினிற் சூதகப்பெண்கணிழலி, சூளையிற்சூழ்தலுறுபுகையிற்களேபரஞ் சுடுபுகையினீசர்நிழலில், காரிரவிலாசுநிழ லிற்கடாநிழலிலொடு கருதியவிளக்குநிழலில், காமுகரினிஷ்டையில் லாதவர்முகத்திற் கடுஞ்சினத்தோர்சபையினில், ஈரமில்லாக்களர் நிலத்தினிலிராத்தயிரி லிழியுமதுபானர்பாலில், இலைவேல்விளாநிழலினிதமழுக்கடையமனையி லேன்னாயகரகத்தாள், வாரியமுறத்தூள் பெருக்குதூண்மூதேவி மாறாதிருப்பளென்பார், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௧௫)

### திருத்தினுந்திருந்தாமை.

கட்டியெருவிட்டுச் செழுந்தேனைவார்க்கினுங் காஞ்சிரங்கைப்புவிடுமோ, கழுதையைக்கட்டிவைத்தோமய்வளர்க்கினுங் கதிபெருங்குதிரையாமோ, குட்டியரவுக்கமுதளித்தேவளர்க்கினுங் கொடுவிஷமலாதுதருமோ, குக்கனெடுவாலுக்கு மட்டையைக்கட்டினுங் கோணைமலேநிமிருமோ, ஓட்டியேகுறுணிமையிட்டாலும் நயமிலாயோனிகண்ணாகிவிடுமோ, உலவுகனகர்ப்பூரவாடைபலகூட்டினு முள்ளியின் குணமாறுமோ, மட்டிகட்காயிரம் புத்திசொன்னாலுநன்மார்க்கமரியாதைவருமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௧௬)

## குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகைமுகத்தினிலறியலாமானிலப்பூமிகளெலாம்,மழையினாலறியலா நல்லார்பொலார்தமை மக்களாலறியலாகும், கனமருவுசூரரைச் சமரினாலறியலாங் கற்றவொருவித்துவானைக், கல்விப்பிரசங்கத்தினா லறியலாங்குணங்களை நடையினாலறியலாம், தனதகமடுத்தது பளிங்கினாலறியலாஞ் ஜாதிசொல்லாலறியலாம், தருநீதிகேள்வியாலறியலாம் பிணிகளைத் தாதுக்களாலறியலாம், வனசவிகசிதவதனபரிபூரணானந்தவாலவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௮)

## குணபாருமை

குணமிலாதுஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டிடப்படுத்திவிடலாம், கொடியபலவிஷநோய்களியாவையுமௌஷதமது கொடுத்துத்திருப்பிவிடலாம், உணர்விலாப்பிரமராக்ஷசிமுதற்பேய்களையுகந்துகூத்தாட்டிவிடலாம், உபாயத்தினாற்பெரும் பறவைக்குநற்புத்தியுண்டாக்கலாமுயிர்பெறப்பிணமதையெழுப்பலாமக்கினி சுடாமற் பெரும்புனலெனச்செய்யலாம், பிணியையுமகற்றலாங் காலதூதுவரையும்பின்புவாவென்றுசொல்லலாம்,மணலையுங்கயிறாய்த்திரிக்கலாங் கயவர்குணமட்டுந்திருப்பவசமோ, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௯)

## இத்தீக்குணத்தோரிவ்விலங்குபோல்வரெனல்

தான்பிடித்ததுபிடிப்பென்னுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர்குரங்கு, சபையிற்குறிப்பறிய மாட்டாமனின்றவர் தாம்பயனிலாதமரமாம், வீம்பினாலெளியவரையெதிர்பண்ணிநிற்குமொரு வெறியர்குரைநாயாவார், மிககாடிவருவோர்முகம்பார்த்திடாலோபர் மேன்மையில்லாதகழுதை, சோம்பலொடுபெரியோர் சபைக்குட்படுத்திடுந் தூங்கலேசண்டிக்கடா, சூதுடனடுத்தோர்க்கிடுக்கணேசெய்திடுந் துஷ்டனேகொட்டுதேளாம், மாம்பழந்தனைவேண்டிஎங்காளிலீசனை வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே

## அற்பர்வாழ்வால் குணம்வேறுபடுதல்.

அற்பர்க்குவாழ்வுசற்றதிகமானால்விழிக்கியாவருருவுந்தோன்றிடா, தண்டிநின்றேநல்ல வார்த்தைகளுரைத்தாலுமவர்செவிக்கேறிடாது, முட்பட்சமானபேர்வருகினுமொருமென் மொழியும்வாய்வராது, மோதியேவாதப்பிடிப்புவந் ததுபோலமுன்காலை யகலவைப்பார், விற்பனமிகுந்தபெரியோர்செய்திசொன்னாலும் வெடுவெடுத்தேசிரிப்பார், விருதாமகத்துவப்பேயதுசவுக்கடி விழும்போது தீருமென்பார், மற்புயந்தனினீபமாலையணிலோலனே மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

இத்தீங்குளோரிக்கோர்போல்வரெனல்

அன்னைதந்தையர்புத்தி கேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவான், அஞ்சாமலெதிர்பேசி நிற்குமனையாள்வாக்கி லங்காரகச்சன்மமாம், தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகேளாவடிமை சந்திராஷ்டகமென்னலாம், தன்பங்குதாவென்று சபையேறுதம்பியோ சார்ந்தசன்மச்சூரியன் நன்னயமிலாதவஞ் சனைசெய்ததமையன் மூன்றாமிடத்தில்வியாழம், நாடோறும்விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன்ராகுகேதுக்களெனலாம், மன்னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்குமந்திரமுறைத்தகுருவே, மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௨)

நல்லினஞ்சேர்பயன்,

சந்தனவிருட்சத்தை யண்டிநிற்கின்றபலதருவுமவ்வாசனைக்கும், தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும், பந்தமிகுபாலுடன்விளாவியதணீரெலாம்பால்போனிறங்கொடுக்கும், படிகமணிகட்குளே நிற்கின்றவடமுமப்படியே குணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக்கல்லைத் தரித்திடிலடுத்ததும் பசுமையாகும், ஆனபெரியோர்களொடு சகவாசமதுசெயி லவர்கள்குணம்வருமென்பர்காண், மந்தரநெடுங்கிரியின்முன்கடல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௪௩)

வலியோரையுமூழ்விடாமை

அன்றுமுடிசூடிவ திருக்கரகுராமன்முனருங்காடுறைந்ததென்ன அண்டரெல்லாமமுர்த முண்டிடப்பரமனுக்காலம்லபித்ததென்ன, வென்றிவருதேவர்சிறைமீட்ட நீகளவில்வேடிச்சியைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்கு மயனுக்கொருசிரமபோகிவெஞ்சிறையிலுற்றதென்ன, என்றுமொருபொய்சொலாமன்னவன்விலைபோனதென்ன காண்வல்லமையினால், எண்ணத்தினாலொன்றும்வாராதுபரமசிவனெத்தனப்படிமுடியுமாம், மன்றுதனினடனமிடுகங்காதரன்பெற்றவரபத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. ()

பெரியோர்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்

தந்தைதாய்வாக்கிய பரிபாலனஞ்செய்தவன் றசரதகுமாரராமன், தமையனருள்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்தருமனுக்கிளையநால்வர், சிந்தையிலுணர்ந்துகுரு வாக்கியபரிபாலனஞ் செய்தவனரிச்சந்திரன். தேகியென்றோர்க்கில்லையெனுவாக்கியபாலனஞ் செய்தவன்றானகர்னன் நிந்தைதவிர்வாக்கியபரிபாலனஞ் செய்தவனீள்பெலமிகுந்தவனுமான், நிறையுடன்பத்தாவின் வாக்கியபரிபாலனநிலத்தினளாகினிசெய்தாள், மங்கைவழிகோயில் தளமுங்குலவு துய்யமுகன்மகிழ்தாவுகந்ததுணைவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௪௫)

முயற்சியின்மிக்கதூழெனல்.

வங்காளமேபுகினும் வாருகோலொருகாசு மட்டன்றியதிகமாமோ, வானேறியுயரப்பறந்தாலுமூர்க்குருவிவண்ணப்பருந்தாகுமோ கங்காசலந்தனின் மூழ்கினும்பேச்சுரைக் காய்நல்லசுரையாகுமோ, கடலுக்குன்னாழியை யமுக்கிமொண்டிடிற்காணுபோனாழிதான், ஐங்காதமோடினுந் தன்வினைகடன்றேடே யடையாமனீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலும் வெகுசொலைகள்சுற்றினு மமைத்தபடியன்றிவருமோ, மங்காதசெந்தமிழ்க் கொண்டுநற்சீரர்க்கு வந்ததுயர் தீர்த்தமுருகா; மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௬)

இடும்பாலழிவு.

சூரபத்தமன்பெலமுமிராவணன்றீரமுந் துடுக்கானகஞ்சன் வலியும், துடியானவிரணியன்வரப்பிரசாதங்களுந் தொலையாதவாலிதிடமும், பாரமிகுதுரியோதனாதிநூற்றுவரது பராக்கிரமமதுகைகடவர், பாரிப்புமாபெலியினுண்மையுஞ்சோமுகன் பாங்கிலுறுவல்லமைகளும், ஏரணவுகீசகன்கனதையுந்திரிபுரரெண்ணமுந்தக்கனெழிலும், இவர்களதுசம்பத்து நின்றுதோவவரவ ரிடும்பாலழிந்ததன்றோ, மாரனைக்கண்ணாலெரித்தருள் சிவன்றந்தவரப்புத்திரவடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௭)

நட்புநிலை.

மாமதியின்முயலானததுதேய்வழித்தேய்ந்து வளருமப்போது வளரும், வாவிதனிலாம்பல்கொட்டிகளதனி னீர்வற்றினவற்றிடும் பெருகிலுயரும், பூமருவுபுதல்பூடு கோடையிற்றீய்ந்திடும் பொங்கு காலந்தழைக்கும், புண்டரிகமிரவிபோமளவிற்குவிந்திடும் போதுதயமாகின்மலரும், தேகமுடலிளைக்கிலுயிர் கூடவுமிளைக்குமதுதேறிலுயிருஞ்சிறக்கும், சேர்ந்தோர்க்கிடுக்கணது வந்தாலுநல்லோர் சினேகமப்படியாகுமே, வாமனசுரூபமத யானைமுகனுக்கிளையவால குருபரவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவு குமரேசனே (௬௮)

கைப்பலனுமவை.

பருவத்திலேபெற்றசேயும்புரட்டாசி பாதிசம்பாநடுகையும், பலமினியவாறுதனிலானைவால்போலவே வயிர்கொண்டுவருகரும்பு, கருணையொடுமிக்கநாணயமுளோர்கையினிற்கடனிட்டுவைத்தமுதலும், காலமதுநேறிற்றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடுகல்வியும், விருந்தரசரைக்கண்டுபழகியசினேகமும் விவேகிகட்குபகாரமாம், வீணல்லவிவையெலாங்கைப்பலனதாகவயிர்த்தியாய்வருமென்பர்காண், மருவுலாவியநீபமாலையுந்தண்டரளமாலையும்புனைமார்பனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௯)

### சமயத்துக் குதவாதவை

கல்லாதுபுத்தகந் தனிலெழுதிவீட்டினிற் கட்டிவைத்திடுவித்தையும், காலங்களுக்குதவ வேண்டுமென்றன்னியன் கையிற்கொடுத்தபொருளும், இல்லாளைநீங்கியேபிற்பாரிசதமென் றிருக்கின்றகுடிவாழ்க்கையும், ஏறுமாறாகவே தேசாந்தரம்போயிருக்கின்றபிள்ளைவாழ்வும், சொல்லானதொன்றும்வர் மனமானதொன்றுமாச் சொல்லும்வஞ்சகர்நேயமும், சுகியம்புண்டென்றிருப்பதுவெலாந்தருணத்திலுதவாதுகாண், வல்லாணகொங்கைமடமாதுதெய்வானைகுறவள்ளியங்காளநேயா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௰)

### திரும்பமாட்டாதவை

ஆடரவின்வாயினிலகப்பட்டதவளையுமானைவாயிற்கரும்பும், அரிதானகப்பலிற் பாய்மரக்காற்றினிலசைப்பட்டுமெலிகாக்கையும், நாடறியவேதாரைவார்த்துக்கொடுத்தது நமன்கைக்குளானவுயிரும், நலமாகவேயணைகடந்திட்ட வெள்ளமும்நாய்வேட்டைபட்டமுசலும், தேடியுண்பார்வைக்குளானபலவுடையும்தீவாதையானமனையும், திரள்கொடுங்கோலரசர் கைத்தேறுபொருளுந் திரும்பிவாராதென்பர்காண், மாடமிசையன்னக்கொடித்திரள்கொள்சோணாடுவாழவந்திடுமுதல்வனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (௫௧)

### இதினுமிதுநன்றென்பவை.

கடுகடுத்தாயிரஞ் செய்குவதிலின்சொலாற் களிகொண்டழைத்தனன்று, கனவேள்வியாயிரஞ் செய்வதிற்பொய்யுறை கருத்தொடுசொலாமைநன்று, வெடுவெடுக்கின்றதோ ரவிவேகியுறவினில் விவேகியொடுபகைமைநன்று, வெகுமதிகளாயிரஞ் செய்வதினுமைக் காசுவேளைகண்டுதவநன்று, சடுதியிற்பக்குவஞ்சொல்லுங் கொடைக்குச்சற்றுமில்லையென்னனன்று, சம்பத்துடன்பிணியின் மெலிகுவதினோயற்றதாரித்திரிய மிகநன்றுகாண், மடுவினிற்கரிபோலமென்னவந்தருள்செய்த மால்மருகனானமுதல்வா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௨)

### பலகூடினும் ஒன்றற்கீடாகாதவை

தாரகைகளொருகோடி வானத்திருக்கினுஞ் சந்திரர்க்கீடாகுமோ, தாருவிற்கொடிகொளிகள் பலகூடினுமொரு தப்பட்டவோசையாமோ, கோரமிகுபன்றியின் குட்டிபலகூடினொரு குஞ்சரக்கன்றாகுமோ, கொட்டிமலர்வாவியிற் பலகூடினுமொரு கோசனகமலமாகுமோ, பாரமிகுமாலைகள் பலகூடினுமொரு பைம்பொன்மக மேருவாமோ, பலனிலாப்பிள்ளைகளனேகம் பிறந்துமிற்பனொருவனுக்குநிகரோ, வாரணக்கொடியொரு கரத்திற்பிடித்தொன்றில் வடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே, (௫௩)

### அருமையறிதல்.

மணமாலையருமையைப் புனைபவர்களேயறிவர் மட்டிக்குரங்கறியுமோ, மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவதுண்டோ, கணவருடையருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவளறிவளோ, கருதுமொருசத்தியின் பாண்டமென்பதைவருங் களவானநாயறியுமோ, குணமானகிளியருமை தனைவளர்த்தவரறிவர் கொடியபூனையுமறியுமோ, குலவுபெரியோரருமை நல்லோர்களேயறிவர் கொடுமூடர்தாமறிவரோ, மணவாளநீயென்று குறவள்ளிபின்றொடர வனமுழுதழுவுமழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௪

### திச்சாபாழ் பயன்படாதவை.

மடுவினிற்கஞ்சமலருண்டோருவரணுகாமல் வன்முதலையங்கிருக்கும், மலையினிற்றேனுண்டு சென்றொருவர்கிட்டாமன் மருவியதில்வண்டிருக்கும், நெடுமைதிகழ்தாழைமலருண்டொருவரணுகாமல் நீங்காதமுள்ளிருக்கும், நீடுபலசந்தன விருட்சமுண்டணுகாது நீளரவுசூழ்ந்திருக்கும், குடிமல்கிவாழ்கின்ற வீட்டினிற்செல்லாது குரைநாய்களங்கிருக்கும், கொடுக்குந்தியாகியுண் டிடையூறுபேசுங் கொடும்பாவியுண்டுகண்டாய், வடிவையுங்கடுவையும் பொருவுமிருகண்ணிகுறவள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௫

### சணிகையரிழிவு.

தேவதாசிகள்வீடு சந்தனப்பெரும்பேட்டை சேர்ந்திடுபடுக்கைவீடு, தெருவாசல்கட்டில்பொது வம்பலமுடுத்ததுகில் செய்யகூதாடுசாலை, மேவலாகியகொங்கை கையாடுதிரள்பந்து விழிமனங்கவர் தூண்டிலாம், மிக்கமொழிநீர்மேலெழுத்ததிகபோகமொரு மின்னலிருதுடைசர்ப்பமாம், ஆவலாகியவல்குலோதண்டம் வாங்குமிடமதிகபடமானதுகல், அமிர்தவாயிதழ்சித்திர சாலையெச்சிற்குழியவர்க்காசைவைக்கலாமோ, மாவடிவுகொண்டே யொளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுதா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௬

### கலிகாலக்கொடுமை

தாய்புத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர்தந்தையைச்சீறுங்காலம், சற்குருவைநிந்தைசெய் காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாதகாலம், பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டிவையினுங் கேட்கின்றகாலநற் பெரியர்சொல்கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன் சிறுமையுறுகாலமிகுசிறியவன்பெருகுகாலம், செருவில்விட்டோடினோர் வரிசைபெறுகாலம்வசைசெப்புவோர்க்குதவுகாலம், வாய்மதம்பேசிவிடு மனியாயக்காரர்க்கு வாய்த்தகலிகாலமையா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௭

### அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுறச்சபையின்மேல் வட்டமாய்க்காணவைப் போன்பிதாவாம், கற்றுணர்ந்தேதனது புகழார்பிதாவைப் ப்ரகாசஞ்செய்வோன்புத்திரன், செல்வமிகுசணவனேதெய்வமென்றனுதினஞ்சிந்தை செய்பவள்மனைவியாம், சினேகிதன்போலவே யன்புவைத்துண்மைமொழி செப்புமவனேசோதரன், தொல்வளமிகுந்தநூற்கரைதெரிந்துறுதிமொழி சொல்லுமவனேகுரவனும், சொன்னநெறிதவறாமல் வழிபாடுசெய்துவரு துய்யனேயினியசீஷன், வல்விரகமிஞ்சுசுர குஞ்சரியுடன்குறவர் வன்சிறைமணந்தகணவா மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௮)

### சிறுமையிற்பெருமை

சேற்றிற்பிறந்திடுங் கமலமலர்கடவுளது திருமுடியின் மேலிருக்கும், திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத்தரசனது தேகத்தின்மேலிருக்கும், போற்றிபிடுபூச்சியின் வாயினூல்பட்டென்று பூசைக்குநேசமாகும், புகலரியவண்டேச்சி லானதேன்றேவர்கொள் புனிதவபிஷேகமாகும், சாற்றியபுலாலொடுபிறந்தகோரோசனைசவாதுபுழுகனைவர்க்குமாம், சாதியினத்திற் பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ, மாற்றிச்சுரத்தினை விபூதியாலுடல்குளிர வைத்தமெய்ஞ்ஞானமுதலே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௯)

### செய்யத்தகாதவை.

தானாசரித்துவரு தெய்வமிதுவென்றுபொய்ச் சத்தியஞ்செயில்விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென்றுமுத்தந் தனைகொடுத்தாலதுசுடும், ஆனாலுமேவலர்கள் மெத்தவுந்தனதென்றடாததுசெயிற்கெடுதியாகும், ஆனை தான்மெத்தப் பழக்கமானாலுஞ்செயாது செய்தாற்கொன்றிடும், தீனானதினிதென்று மீதூண்விரும்பினாற் றேகபீடைகளேதரும், செகராசர்சனாவென்ன வேலாதகாரியஞ்செய்தான்மனம்பொறார்காண், வானாடுபுகழுமொரு சோணாடுதனையிவண் வந்தவதரித்தமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரேசனே. (௬௰)

### நடுவுநிலைமை.

வந்தவிவகாரத்தி லினியபரிதானங்கள் வருமென்றுநேசரென்றும், வன்பகைஞரென்றுமய லோரென்றுமிக்கதன வானென்றுமேழையென்றும், இந்தவகையைக்குறித்தொரு பக்ஷபாதமோரெள்ளளவுரைத்திடாமல்; எண்ணமுடனேலிகித புத்தியொடுசாக்ஷிக்குமேற்கச்சபாசமதமா, மூர்த்தவிருதலையுஞ் சமன்செய்தகோல்போன்மொழிந்திடிற்றர்மமதுகாண், முனைவிமனுடல்பாதி மிருகந்தனக்கென்று முன்றருமர் சொன்னதலவோ, மைந்தனென வன்றுமைமுலைப்பால்கொடுத்திட வளர்ந்தருள்குழந்தைவடிவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௧)

பக்ஷபாதம்.

ஓரவிவகாரமாய்வந்தவர்முகம்பார்த் துரைப்போர்மலைக்குரங்காம், உயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமவரில்லமுறையுமோர் பாழ்நத்தமாம், தாரணியிலிவர்கள்கிளை நெல்லியிலைபோலுருகும் சமானமாவெழுபிறப்பும், சந்ததியிலாதுழல்வரவர்முகத்தினின் மூத்ததையலேகுடியிருப்பாள், பாரமிவரென்றுபுவி மங்கையுநடுங்குவள் பழித்ததுர்மரணமாவார், பகர்முடிவிலேரவுர வாதிநரகத்தனுபவிப்பரெப்போதுமென்பார், வாரமுடனருணகிரி நாதருக்கநுபூதிவைத்தெழுதியருள்குருபரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௬௨

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

கொங்கையில்லாதவட் கெத்தனைப்பணியுடைமை கூடினும் பெண்மையில்லை, கூறுநிறைகல்வியில்லாமலெத்தனைகவிதை கூறினும்புலமையில்லை, சங்கையில்லாதவர்க் கெத்தனைவிவேகந் தரிக்கினுங்கனதையில்லை, சட்சுவைபதார்த்தவகை யுற்றாலுநெய்யிலாச் சாதமுக்திர்ப்தியில்லை, பங்கயமிலாமலெத் தனைமலர்கள்வாவியிற் பரித்துமேன்மையில்லை, பத்தியில்லாமல்வெகுநியமமாயர்ச்சனைகள் பண்ணினும் பூசையில்லை, மங்கையரிலாமனைக் கெத்தனையருஞ்செல்வம் வரினுமில்வாழ்க்கையில்லை, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௬௩

அளவுபடாதவை.

வாரியாழத்தையும் புனலெறியுமலைகளையு மாநிடர்கள் சனனத்தையும், மன்னவர்கணினைவையும் புருஷர்யோகங்களையும் வானினுயர்நீளத்தையும், பாரிலெழுமணலையும் பலபிராணிகளையும் படியாண்டமன்னவரையும், பருப்பதத்தின்னிறையு மீசுரச்செயலையும் பனிமாரிபொழிதுளியையும், சீரியதமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையுஞ்சித்தர்தமதுள்ளத்தையும், தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடுமோ, வாரிசமடந்தைகுடி கொண்டநெடுமாலுக்கு மருகனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௬௪

பிறர்மனைநயத்தல்.

தந்தாரமின்றியே பரதாரமேனினைவுதனைவைத்தகாமுகர்க்குத், தயையில்லைநிசமில்லை வெட்கமில்லைசமரினிற் றைரியஞ்சற்றுமில்லை, அந்தாரமில்லைதொடர் முறையில்லைநிலையில்லை யறிவில்லைமரபுமில்லை, யறமில்லைநிதியில்லை யிரவினிற்றனிவழிக் கச்சமோமனதிலில்லை, நந்தாதசனமில்லை யினமில்லையெவருக்கு நட்பில்லைகனதையில்லை, நயமில்லையிளமைதனில் வலிமையில்லைமுத்திபெறு ஞானமில்லையென்பர்கண்டாய், மந்தாரபரிமள சுகந்தாதிபுனையுமணி மார்பனேயருளாளனே மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௬௫

### பிறந்தாற்பெறுபேறு.

சடமொன்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று தன்பேர்விளங்கவேண்டும், சதிருடனிதல்லாது மெய்ஞ்ஞானியென்றவ தரிக்கவேவேண்டுமல்லால், திடவினியரணசூர வீரனிவனென்னவே திசைமெச்சவேண்டுமல்லால், தேடியெனவருபவர்க்கில்லையென்னாமலே செய்யவும்வேண்டுமல்லால், அடைவுடன்பலகல்வியாராய்ந்துவித்துவானாகவேவேண்டுமல்லால, அறிவானதுரைமக்களாகவரவேண்டுமிவாதிகபூபாலனையா, வடகுவடுகிடுகிடென எழுகடலுமலையெறிய மணியுரகன்முடிகணெரிய, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௪

### வேசைநிந்தை.

தேடித்தம்விட்டிற் பணக்காரர்வந்திடிற் றேகசிவன்போலவே, சிநேகித்தவும்மையொரு பொழுதுகாணாவிடிற் செல்லுறுதன்னமென்றே, கூடிச்சுகிப்பரென் றுசையுண்மேலென்று கூசாமலாணையிடுவார், கொங்கைகளைவெடிக்கப்பிடிக்கக்கொடுத்திசழ் கொடுப்பர் சும்பனமுகப்ப, வேடிக்கைபேசிப்பேசைமுதல்பறித்தபின் வேறுபடநிந்தைசெய்து, விடவிடப்பேசுவார் தாயகலமூட்டிவேவிட்டுத்துரத்திவிடுவார் வாடிக்கையாயிந்த வண்டப்பரத்தையர்மயக்கத்தைநம்பலாமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௫

### இதற்கிது உறுதியெனல்.

கைக்குறிதிவேல்வின் மனைக்குறுதிமனையாள் கவிக்குறுதிபொருளடக்கம், கன்னியர்தமக்குறுதி கற்புடைமைசொற்குறுதி கண்டிடிற்சத்யவசனம், மெய்க்குறுதிமூன்பின் சபைக்குறுதிவித்வசனம் வேசையற்குறுதிதேடல், விரருக்குறுதிபெண் மூப்பினுக்குறுதியூண் விரருக்குறுதிதீரம், செய்க்குறுதிநீரும் பார்க்குறுதிசெங்கோல் செழும்படைக்குறுதிவேழம், செல்வந்தனக்குறுதி பிள்ளைகணகர்க்குறுதிசேர்ந்திடும்சர்ச்சனர்களாம், மைக்குறுதியாகி விழிக்குறமடந்தைசுர மங்கைமருவுந்தலைவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௬

### வறுமையிற்சிறுமை.

வறுமைதான்வந்திடிற் றாய்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்றுமெண்ணாள், வாக்கிற்பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாதவசனமாய்வந்துவிளையும், சிறுமையொடுதுலையா விசாரமேயல்லாதுசிந்தையிற்றைரியமில்லை, செய்யசபைதன்னிலே சென்றுவர வெட்கமாஞ்செல்வரைக்காணினாணும், உறுதிபெறுவீரமுங் குன்றிவிவிருந்துவரிலுயிருடன்செத்தபிணமாம், உலகப்பழித்திடும் பெருமையோர்முன்புசென்றொருவரொடுசெய்திசொன்னால், மறுவசனமுஞ்சொலார் துன்பினிற்றுன்பமிது வந்தணுகிடாதருளுவாய், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭௭

### இச்சார்பானன்மையிழப்பு.

ஆனைதண்ணீரினிழல் பார்த்திடத்தவளைசென் றங்கேகலக்கியு
லவும், ஆயிரம்பேர்கூடி வீடுகட்டிடிலேதாமறைகுறளுமுடனே வரு
ம், ஏனைநற்பெரியோர்கள், போசனஞ்செயுமளவி லீக்கிடந்திசைகே
ட்டாம், இன்பமிகுபசுவிலே கன்றுசென் றூட்டுதற் கினியகோண
து தடுக்கும, சேனைமன்னவரென்ன கருமநியமிக்கினுஞ் சிறியோர்க
ளாற்குறைபடும், சிங்கத்தையும்பெரிய ரிஷபத்தையும்பகைமை செ
ய்ததொருநரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வ யானையுந்தழுவுமணி
மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடுமலை
மேவுகுமரேசனே. எ௮

### இடையூறுற்றும் பயன்படுபவை.

ஆறுதண்ணீர்வற்றி விட்டாலுமூற்றுநீ ரமுதபானங்கொடுக்கு
ம், ஆதவனையொருபாதி கட்செவிமறைந்தாலு மப்போதுமுதவிசெ
ய்வன், கூறுமதிதேய்பிறைய தாகவேகுறையினுங் குவலயத்திருள்
சிதைக்கும், கொல்லைதான்சாவிபோய்விட்டாலுமங்குவரு குருவிக்
குமேச்சலுண்டு, வீறுடனுதாரிதான் மிடியானபோதினிலு மிகநா
டிவருபவர்க்கு, வேறுவகையில்லையென் றுரையாதியன் றளவியங்குள
மகிழ்ந்துதவுவான், மாறுபடுசூரசங்காரகம்பீரனே வடிவேலணிந்த
முருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயநீடு மலைமேவுகுமரே
சனே. எ௯

### இன்னவர்க் கிதுவில்லை யெனல்.

சார்பிலாதவருக்கு நிலையேதுமுதலிலா தவருக்கிலாபமேது, து
ணையிலாதவர்தமக் குறவேதுபணமிலா தார்க்கேதுவேசையுறவு,
ஊரிலாதவர்தமக் கரசேதுபசிவேளை யுண்டிபாற்குறுதிநிலையே. உ
ண்மையில்லாதவர்க் கறமேதுமுயல்விலார்க் குறுவதொருசெல்வ
மேது, சோர்விலாதவருக்கு மற்றுமொருபயமேது சுகமிலார்க்காசை
யேது, தூர்க்குணமிலாதவர்க் கெதிராளியேதிடர்செய் துஷ்டர்க்கி
ரக்கமேது, மார்புருவவாலிமே லஸ்த்ரம்விடுத்தநெடு மால்பருசனு
ணமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே
சனே. அ௰

### இதினுமிதுநன்றெனல்.

பஞ்சரித்தருமையறியார்பொருளையெய்தலிற் பலர்மனைப்பிச்
சைநன்று, பரிவாகவுபசார மில்லாவிருந்தினிற் பட்டினியிருக்கைந
ன்று, தஞ்சவொருமுயலையடு வென்றிதனில்யானையொடுசமர்செய்து
தோற்றனன்று, சரசகுணமில்லாத பெண்களைச்சேர்தலிற் சன்னி
யாசித்தனன்று, அஞ்சலார்தங்களொடு நட்பாயிருப்பதனி லாவி
னொடுபழகுவதுநன், றந்தணர்க்காபத்திலுதவாதிருப்பதனி லாரு
யிர்விடுத்தநன்று, வஞ்சகருடன்கூடி வாழ்தலிற்றனியே வருந்திடு
ஞ்சிறுமைநன்று, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமே
வுகுமரேசனே. அக

## நிலையாதவை.

கொற்றவர்கள்ராணுவமு மாறுநோக்கிய குளங்களிற் றாசியுறவும், குணமிலார்நேசமும் பாம்பொடுபழக்கமுங் குலவுகிர்விளையாடலும், பற்றலார்தமதிடை வருந்துவிசுவாசமும் பழயதாயாதிகிளைஞரும், பரதாரமாதரது போகமும்பெருகிவரு பாங்கானவாற்றுவரவும், நற்றுமொருதுர்ப்புத்தி கேட்கிறபேருறவு நல்லமதயானைநட்பும், காவினல்லுறவுமொரு நாள்போலிராதிவகை நம்பப்படாதுகண்டாய், மற்றுமொருதுணையில்லை நீதுணையெனப்பரவும் வானவர்கள்சிறைமீட்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௨

## நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையிங் குயில்சென்றுமாங்கனி விருப்பமொடுதேடிநாடும், மிடைகருங்காகங்களெக்கனியிருந்தாலும் வேப்பங்கனிக்குநாடும், எக்காலும்வரிவண்டு பங்கேருகத்தினி லிருக்கின்றதேனைநாடும், எத்தனைசுகந்தவகை யுற்றாலுமருள்வண்டினந் துர்மலத்தைநாடும், தக்கோர்பொருட்சுவை நயங்களெங்கேயென்று தாம்பார்த்துகந்துகொள்வார், தாழ்வானவன்கண்ணிர் குற்றமெங்கேயென்று தமிழிலாராய்வர்கண்டாய், மைக்காவிழிமாது தெய்வானையுங்குறவர் வள்ளியுந்தழுவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௩

## தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலு மாமுகிலொதுங்குதலும் விரிசிலைக்குனிந்திடுதலும், மேடமதகன்றிடலும் யானைகளொடுங்குதலும்வெளவிடைகள் துள்ளிவிழலும், மூங்கில்கள் வணங்குதலு மேலவரிணங்குதலுமுனிவர்கணயந்துகொள்ளும், முதிர்படையொதுங்குதலும் வினைஞர்களடங்குதலு முதலினர்பயந்திடுதலும், ஆங்காரவுசாய்குதலுமகிழ்மலருலர்ந்திடலு மாயர்குழல்குவிபடலும், அம்புவியிலிவைகாரியங்களுக்கல்லா மலதனிலிளைப்புவருமோ, மாங்கனிக்காவானைவலம்துபுரிந்துவளர் மதகரிக்கிளையமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௪

## தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற்புறாரெண்டிருந்திடத் துறவுகண்டேவேடுவன், தோலாமலம்பெய்யவேண்டுமென்றொருகணை தொடுத்துவில்வாங்கிநிற்க, ஊடாடிமேலேயெழும்பிடிலடிப்பதற் குலவுராசாளிகூட, உயரப்பரந்துகொண்டேதிரியவப்போதுதைத்தசிலைவேடனடியில், சேடாகவவ்விஷந்தீண்டவேயவன்விழச்சிலையிற்றொடுத்தவாளி, சென்றிராசாளிமெய் தைத்துவிழவவ்விருசிறைப்புறாவாழ்ந்தவன்றோ, வாடாமலிவையெலாஞ் சிவன்செயலல்லாதுன் மனச்செயலினாலும் வருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௫

## பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைழக வடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டுமப்பால், ஈரைம்பொருத்தமொடு மதுரமாய்பளபளப்பிளியசொற்கமையவேண்டும், அழுத்தமிகு குறளினுக்கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும், அன்பானபாவின மிசைந்துவரல்வேண்டுமூனலங்காரமுற்றதுறையில், பழுத்துளமுவக்தோசையுற்றுவரல்வேண்டும் படிக்குமிசைகூடல்வேண்டும், பாங்காகவின்னவைபொருந்திடச்சொற்கவிதை பாடிச்சிறப்பென்பர்காண், மழுத்தினஞ்செங்கைதனில் வைத்தகங்காளனருண் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௬)

## விபூதி தரிக்குமுறைமை.

பத்தியொடுசிவசிவவென்றுதிருநீற்றைப் பரிந்துகையாலெடுத்துப் பாரினில்விழாதபடி யண்ணாந்து செவியொடு பருத்தபுஜமீதிலொழுக, நித்தமூவிரல்களா னெற்றியினழுந்தலுற நினைவாய்த்தரிப்பவர்க்கு, நீடுவினையணுகாது தேகபரிசுத்தமாய் நீங்காமநிமலனங்கே, சத்தியொடுநித்தம்விளை யாடுவன்முகத்திலே தாண்டவஞ்செய்யுந்திரு, சஞ்சலம்வாராது பரகதியுதவுமிவரையே சத்தியுஞ்சிவனென்னலாம், மத்தினியமேருவெனவைத்தமுதினைக்கடையுமான்மருகனணமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௭)

## விபூதி வாங்குமுறைமை.

பரிதனிலிருந்துமியல் சிவிகையிலிருந்துமுயர் பலகையிலிருந்துமிகவே, பாங்கானவம்பலக் தனிலேயிருந்தும் பருத்ததிண்ணையிலிருந்தும், தெரிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்கமேனின்று திருநீறுவாங்கிபிடினும், செங்கையொன்றாலும் விரன்மூன்றாலும் வாங்கினுங் இகழ்ந்தம்பலத்திரேடும், அரியதொருபாதையி னடக்கின்றபோதினு மசுத்தனிலமானவதிலும், அங்கேதரிக்கிலுந் தந்திடிற்றள்ளினு மவர்க்குநரகென்பர்கண்டாய், வரிவிழிமடந்தைகுற வள்ளிநாயகிதனை மணந்துமகிழ்ஜகநாதனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௮)

## இவ்வுருப்பாற் பயனில்லெனல்.

தேவாலயஞ்சுற்றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண், தினமுமேநின்கமல பாதத்தைநினையாத சிந்தைதானென்னசிந்தை, மேவாகமஞ்சிவ புராணமவைகேளாமல் விட்டசெவியென்னசெவிகண், விமலனைவணங்காத சென்னியென்சென்னிபணிவிடைசெயாக்கையென்னகை, நாவாரநினையேத்தி டாதவாயென்னவாய்நற்றீர்த்தமுழ்காவுடல், நானிலத்தென்னவுடல்பாவியாகியசனனமெண்ணிறற்பலனேதுகாண், மாவாகிவேலைதனில் வருசூரன்மார்புருக வடிவேலைவிட்டமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௯)

### நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனகமங்கையுடன் மூத்தவள்பிறந்தென்ன நலவுமாட்டின்கணவர்தான், கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும் பாசியுற்றுமென்ன, மாதருணுமமுதினொடு நஞ்சம்பிறந்தென்ன வல்லிரும்பிற்றுருத்தான், வந்தேபிறந்தென்ன நெடுமரந்தனின்மொக்குளவளமொடுபிறந்தென்னவுண், பாகமிகுசென்னலொடு பதர்தான்பிறந்தென்னபன்னுமொருதாய்வயற்றிற், பண்புறுவிவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன பலனேதுமில்லையன்றோ, மாகனகமேருவைச்சிலையெனவளைத்தசிவன் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுலவயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௰)

### தன்னினத்தாலழிவு.

குலமானசம்மட்டி குறடினைக்குதவியாய்க் கூரிரும்புகளைவெல்லும், கோடாலிதன்னாலே மரமதுநுழைந்துதன் கோத்திரமெலாமழிக்கும், நலமானபார்வைசேர் குருவியானதுவந்துநண்ணுபறவைகளையார்க்கும், நட்புடன்வளர்ந்தகலைமானென்றுசென்றுதன்னவில்சாதிதனையிழுக்கும், வுலவுநற்குடிதனிற் கோளர்களிருந்துகொண்டுற்றுரையிடழிப்பார், உளவினில்லாமலூராழியாதெனச்சொல்லுமுலகமொழிநிசமல்லவோ, வலமாகவந்தானிடத்தினிற் கனிகொண்டமதயானைதன்சோதரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௧)

### வீணுக்குழைத்தல்.

குயில்முட்டைதனதென்று காக்கையடைகாக்குங்குணம்போலுமீக்களெல்லாம், கூடியேதாமுண்ண வேண்டுமென்றேதினங் கூடியத்தநறவுபோலும், பயில்சோரருக்குப் பிறந்திடத்தாம்பெற்ற பாலனெனருட்கருதியே, பாராட்டிமுத்தமிட்டன்பாய்வளர்த்திடும் பண்பிலாப்புருஷர்போலும், துயிலின்றிநிதிகளைத் தேடியேயொருவர்பாற் றெட்டுத்தெறித்திடாமல், தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டுபோகவரு சொந்தமானவர்வேறுகாண், வயிரமொடு சூரனைச் சங்காரமேசெய்து வானவர்க்குதவுதலைவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௨)

### இதுசேரினிது பயன்படாதெனல்.

அழலுக்குளேவிட்ட நெய்யும்பெருக்கான வாற்றிற்கரைத்தபுளியும், அரிதானகமரிற் கவிழ்த்திட்டபாலும் வருமலகைகட்கிடுபூசையும், சுழல்பெருங்காற்றினில் வெடித்தபஞ்சும்மணற் சொரிகரும்பனிநீருநீள், சொல்லரியகாட்டுக்கெறித்த நிலவுங்கடல் சுழிக்குளேவிடுகப்பலும், விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமூகமாய் வேசைக்களித்தபொருளும், வீணருக்கேசெய்த நன்றியும் பலனில்லைவிருதாவிதென்பர்கண்டாய், மழலைப்பசுங்கிள்ளை முன்கையலேமங்கைதரு வண்ணக்குழந்தைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௩)

## கைவிடத்தகாதவர்.

அன்னைசுற்றங்களையு மற்றைநாண் முதலாவடுத்துவருபழையோரையும், அடுபகைவிற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்பானபெரியோரையும், தன்னைநம்பினவரையுமேழையானவரையுஞ் சார்ந்தமறையோர்தம்மையும், தருணமிதுவென்றுநல்லாபத்துவேளையிற் சரணம் புகுந்தோரையும், நன்னயமதாகமுன் னுதவிசெய்தோரையுநாளுந்தனக்குறுதியாய், நத்துசேவகனையுங் காப்பதல்லாதுகைநழுவவிடலாகாதுகாண், மன்னயிலுமினியசெஞ்சேவலுஞ் செங்கைமலர்வைத்தசரவணபூபனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௯௪)

## தகாதசெயல்.

அண்டிவருமுற்றூர் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோரும், ஆசுதவுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பின்னற்பரையடுத்தபேரும், கொண்டவொருமனையாளிருக்கப்பரத்தையைக்கொண்டாடிமருவுவோரும், கூறுசற்பாத்திர மிருக்கமிதுதானமது குணமிலார்க்கீய்ந்தபேரும், கண்டுவருபுதியோரை நம்பியேபழையரைகைவிட்டிருந்தபேரும், கரிவாலைவிட்டுநரி வால்பற்றிநதிநீர் கடக்கின்றமரியாதைகாண், வண்டடர்கடப்பமலர் மாலிகாபரணமணிமார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௫

## நல்லோர்முறை.

கூடியேசோதரர்கள் வாழ்தலாலுந்தரு குழந்தைபலபெறுதலாலும், குணமாகவேபிச்சை யிட்டுண்டுகையாலுங் கொடும்பிதிர்க்கிடுதலாலும், தேடியேதெய்வங்களுக்கிதலாலும் தியாகங்கள்கொடுத்தலாலும், சிறியோர்கள்செய்திடும்பிழையைப்பொறுத்துச்சினத்தைத்தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கிடுதலாலுமிகநல்வார்த்தைசொல்லலாலும், நன்மையேதருமலாற்றாழ்ச்சிகள்வராவிவைநல்லோர்கள்செயுமுறைமைகாண், வாடிமனநொந்துதமிழ்சொன்னநற்கீரன்முன்வந்துதவிசெய்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௯௬)

## அடைக்கலங்காத்தல்.

அஞ்சலெனுநாயினுட னொருவன்சுமந்துமுன் னாற்றைக்கடத்துவித்தான், அடைக்கலமெனுங்கயற் காகனைமாலுடனருச்சுனன் சமர்புரிந்தான், தஞ்சமெனவந்திடு புறாவுக்குமுன்சிபி சரீரந்தனைக் கொடுத்தான், தடமலைச்சிரகரிந்தவனைமுன்காக்கத் ததீசிமுதுகெலும்பளித்தான், இன்சொலுடனேபூததயவுடையராயினோரெவருக்குமாபத்திலே, இனியதஞ்சீவனை விடுத்தாகிலுங்காத்திரங்கிரக்ஷிப்பான்றே, வஞ்சகிரவுஞ்சமொடு தாருகன்சிங்கமுகன் வளர்சூரனு

டல்கிண்டேவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௭)

### யோக்கியா யோக்கியம்.

பாலின்றுடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகிநீர்சேரிலென்றும், பவளத்தினிடைமுத்தை வைத்திடிற்சோபிதம் படிகமணி கோக்கிலென்றும், மேலினியமன்னர்பால் யானைசேர்வதுசனதை மேஷம்துசேரிலென்றும், மிக்கானதங்கத்தி னவமணியுறிற்பெருமை வெண்கல்லழுத்திலென்றும், வாலிபமினார்களுடனிலையோர்கள் சேரினலம்வளைகிழவர்சேரிலென்றும், மாலிகைதரித்தமணி மார்பனேதெய்வானைவள்ளிக்குவாய்த்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௮)

### பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழிநிற்றலாபத்தின்வந்தபேருக், கபயங்கொடுத்திடுதனல்வினஞ்சேர்ந்திடுதலாசிரியன்வழிநின்றவன், சொன்னமொழிதவராது செய்திடுதல்தாய்தந்தைதுணையடியருச்சனைசெயல்; சோம்பலில்லாமலுயிர் போகினும் வாய்மைமொழி தொல்புவியினாட்டிவிடுதல், மன்னரைச்சேர்ந்தொழுகல் கற்புடையமனைவியொடு ணைக்கிணுந்தாமரையிலை, மருவுநீரெனவுறாத லிவையெலாமேலவர்த மாண்பென்றுறைப்பறன்றே, வண்மையின் மேலிவர்க்கிவ்வுலகமொருகொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

### நூலின்பயன்.

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுண் மலைமேலுகந்தமுருகா, வள்ளிக்கொடிக்கினிய வேங்கைமரமாகினான் வானவர்கள் சேனாபதி, கன்னன்மொழியுமையா டிருப்புதல்வனரன்மகன்கங்கைபெற்றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெய்ஞ்ஞானதேசிகக் கடவுளாவினன்குடியினான், பன்னரியபுல்வயலில் வாலகுமரேசர்மேற்பரிந்துகுருபாததாசன், பாங்கானதமிழாசிரியவிருத்தத்தினறைபாடலொருநூறுகோடி, நனயமதாகப் படித்தபேர்கேட்டபேர் நாடொறுங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும்பெறுவரே. (௱)

குமரேசசதகம் - முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.